I. M. S. வெளியீடு 02/250

நிதிநிலைப் பகுப்பாய்வும் இணைந்த கணக்கீட்டு விகிதங்களும்

FINANCIAL ANALYSIS And Related ACCOUNTING RATIOS

ஆக்கியோன்:
நல்லையா - குமரகுருபரன்
FIMS (England) ICIA (Charter - Canada) Dip Accy

வெளியீடு: மேலாண்மைக் கல்வி நிறுவனம்
Institute of Management Studies

650
குமர

நிதி நிலை ஆய்வு

நிதி நிலை ஆய்வு எனப்படுவது பல்வேறு நிதிக்காரணிகளுக்கிடையான உறவினை ஆய்வு செய்கின்றமையும் விளக்கமளித்தலும் ஆகும். இந்நிதிக்காரணிகள் கணக்கியல் பாரம்பரியத்திற்கேற்ப சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையாக எழுந்த நிதிநிலைக் கூற்றின் தரவுகளே. இது தொடர்பாக மேயெ(ர்) Myer என்பவர் நிதிநிலைக்கூற்று ஒரு தொழில் நிறுவனத்தின் கணக்குகளின் தொகுப்பை அளிக்கின்றது. ஐந்தொகை சொத்து பொறுப்பு மூலதனம் பற்றிய நிலையினை ஒரு குறிப்பிட்ட நாளினில் வெளிப்படுத்துகை செய்யும். வருமானக்கூற்று ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விளைவினை வெளிப்படுத்தும் என்று நிதி நிலைக்கூற்றினை விளக்குகின்றார்.

அமெரிக்க உறுதிப்படுத்தப்பட்ட பொதுக் கணக்காளர் நிறுவனம் "நிதிநிலைக் கூற்று முகாமைத்துவ வளர்ச்சியை முதலீட்டின் நிலையை மற்றும் பெற்ற சாதனைத்திறனை அறிக்கையாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அளிப்பதாகும். இது பதிவு செய்யப்பட்ட உண்மைகள் கணக்கியல் கொள்கைகள் தனிநபர் தீர்ப்புக்களை ஒட்டாகப் பிரதிபலிக்கின்றன" என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

நிதிநிலை ஆய்வு செய்தலும் வியாக்கியான விளக்கப்படுத்தலும் ஒரு முக்கிய கணக்கியல் நடவடிக்கையாகும். இது நிறுவனத்தின் நிதிநிலைமை செயற்

679

பாட்டுத்திறன் என்பவற்றை நிறுவனம் மீது பற்றுடைய பங்குதாரர்கள் கடன் வழங்கும் ஸ்தாபனங்கள் கடனாளர்கள் விருப்புடை முதலீட்டாளர்கள், பணியாளர்கள், ஒப்பந்தகாரர், பொதுத்துறையினர் மட்டுமன்றி நிர்வாகம் மற்றும் முகாமையும் அறிந்து கொள்ள வழிவகுக்கின்றன.

நிதிசார் பகுப்பாய்வு

எதிர் காலத்தைத் திட்டமிடுவதற்கும் குறிப்பாக நிறுவனங்களின் முக்கிய தீர்மானங்கள் முடிவு செய்யப்படுகையிலும், வியாபார நிகழ்வுகள் மற்றும் நிதிசார் நிலைப்பாடுகள் பற்றிய தீவிர பகுப்பாய்வு அத்தியாவசிய முதற் தேவையாக அமைகின்றது.

இவ்வாறு தீர்மானங்கள் முடிவு செய்யப்படுவதற்கு எதிர்கால நிகழ்வுகள் பற்றிய அறிவு மற்றும் அவற்றின் பலாபலன்கள், எதிர்பார்க்கப்படும் இணைந்த இடர்கள், கடந்த கால நிகழ் கால நடவடிக்கைகள் இவற்றின் பெறுபேறுகள் என்பன அடிப்படைத் தரவுகளாகவும் தகவல்களாகவும் அமைந்து மதிப்பீட்டிற்குதவுகின்றன.

நிதி நிலை ஆய்வு

நிதி நிலை ஆய்வு எனப்படுவது பல்வேறு நிதிக்காரணிகளுக்கிடையான உறவினை ஆய்வு செய்கின்றமையும் விளக்கமளிக்கலும் ஆகும். இந்நிதிக்காரணிகள் கணக்கியல் பாரம்பரியத்திற்கேற்ப சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையாக எழுந்த நிதிநிலைக் கூற்றின் தரவுகளே. இது தொடர்பாக மேயெ(ர்) Myer என்பவர் நிதிநிலைக்கூற்று ஒரு தொழில் நிறுவனத்தின் கணக்குகளின் தொகுப்பை அளிக்கின்றது. ஐந்தொகை சொத்து பொறுப்பு மூலதனம் பற்றிய நிலையினை ஒரு குறிப்பிட்ட நாளினில் வெளிப்படுத்துகை செய்யும். வருமானக்கூற்று ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விளைவினை வெளிப்படுத்தும் என்று நிதி நிலைக்கூற்றினை விளக்குகின்றார்.

அமெரிக்க உறுதிப்படுத்தப்பட்ட பொதுக் கணக்கியலாளர் நிலையம் "நிதிநிலைக் கூற்று முகாமைத்துவ வளர்ச்சியை முதலீட்டின் நிலையை மற்றும் பெறுபேறாபலத்தினை அறிக்கையாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அளிப்பதாகும். இது பதிவு செய்யப்பட்ட உண்மைகள் கணக்கியல் கொள்கைகள் தனிநபர் தீர்ப்புக்களைக் கூட்டாகப் பிரதிபலிக்கின்றது என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

நிதிநிலை ஆய்வு செய்தலும் வியாக்கியான விளக்கமளிப்பதும் ஒரு முக்கிய கணக்கியல் நடவடிக்கையாகும் இது நிறுவனத்தின் நிதிநிலைமை செயற்

679

பாட்டுத்திறன் என்பவற்றை நிறுவனம் மீது பற்றுடைய பங்குதாரர்கள் கடன் வழங்கும் ஸ்தாபனங்கள் கடனாளர்கள் விருப்புடை முதலீட்டாளர்கள், பணியாளர்கள், ஒப்பந்தகாரர், பொருட்துறையினர் மட்டுமன்றி நிர்வாகம் மற்றும் முகாமையும் அறிந்து கொள்ள வழிவகுக்கின்றன.

நிதிசார் பகுப்பாய்வு

எதிர் காலத்தைத் திட்டமிடுவதற்கும் குறிப்பாக நிறுவனங்களின் முக்கிய தீர்மானங்கள் முடிவு செய்யப்படுகையிலும், வியாபார நிகழ்வுகள் மற்றும் நிதிசார் நிலைப்பாடுகள் பற்றிய தீவிர பகுப்பாய்வு அத்தியாவசிய முதற் தேவையாக அமைகின்றன.

இவ்வாறு தீர்மானங்கள் முடிவு செய்யப்படுவதற்கு எதிர்கால நிகழ்வுகள் பற்றிய அறிவு மற்றும் அவற்றின் பலாபலன்கள், எதிர்பார்க்கப்படும் இணைந்த இடர்கள், கடந்த கால-நிகழ் கால நடவடிக்கைகள் இவற்றின் பெறுபேறுகள் என்பன அடிப்படைத் தரவுகளாகவும் தகவல்களாகவும் அமைந்து மதிப்பீட்டிற்குதவுகின்றன.

ஒரு நிறுவனத்தின் வினைத்திறன் போக்கினை அறிந்து கொள்ளவும், ஒரே தொழில்துறைசார் ஒரு நிறுவனங்களின் வினைத்திறனை ஒப்பிட்டறிவதற்கும், முதலீட்டாளர்கள் முதலீடு தொடர்பாக முடிவு எடுப்பதற்கும், கடன் வழங்கும் நிறுவனங்களின் பலதரப்பட்ட தீர்மானங்களை எடுப்பதிலும் சாதாரணமாக, நடைமுறையில் நிதிசார் பகுப்பாய்வு பயன் தரும் சாதனமாக அமைகின்றது.

இந்த வகையில் பலதரப்பட்ட தரவுகளையும் தயார் செய்யும் தாபன, சேவை ஸ்தாபனங்கள், பொருளியல் வெளியீட்டு நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்கும் ஸ்தாபனங்கள் முதலிய நிறுவனங்கள் கடந்த கால கணக்கீட்டுத் தரவுகள், பகுப்பாய்வு என்பவற்றுக்கான வியாக்கியான விளக்கங்கள் தொடர்பாகவும் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. செயற்பாடுகளை மதிப்பீடு செய்கையிலும் எதிர்கால நிதித்தரவுகளை எதிர்வு கூற முற்படும் போதும் ஒப்பீடுகள் அவசியமாகின்றன. மேலும் நிதிசார் பகுப்பாய்வானது அனேகம் தொழில் துறைகளின் பொருளாதார நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அதே தொழில் துறைசார் நிறுவனங்களுடனான குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் குறிப்பிட்ட காலப் பகுதிக்குரித்தான தரவுகளின் ஒப்பீட்டையும் கொண்டிருக்கும்.

இந்த வகையில் தரவுகளின் ஒப்பீட்டு அடிப்படையிலான விகிதாசாரங்கள் மிகமிக உபயோகமானவையாக அமைகின்றன. எனவே நிதிசார் பகுப்பாய்வு எனும் செயற்பாடு கடந்த காலப்பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் எதிர்

காலம் பற்றிய தீர்மானமெடுத்தலில் உதவக் கூடுமாயின் இப்பகுப்பாய்வு குறிப்பாக இரு பகுதிகளில் கூடுதல் கவனமுடைத்தாக அமைதல் தவிர்க்க முடியாத.

1, இரு நிறுவனங்களுக்கிடையே அல்லது இரு தொழில் துறைக்கிடையே ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குரித்தான குறிப்பிடத்தக்க உறவுகளையும் போக்குகளையும் அடையாளம் காணுதல்.

2, கடந்த கால போக்குகளின் அடிப்படையிலான எதிர்வு கூறலை மற்றுமப் பாதிக்கும் வகையில் இடம் பெறக்கூடிய அல்லது இடம் பெறச்சாத்தியக் கூறுடைய பாரியமாற்றங்களைத் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளல்

கிடைமட்ட பகுப்பாய்வு செய்யப்படுகிற விபரமான முறைமைகள் குறிப்பிடக்கூடியளவு நடைமுறையில் வேறுபடுகிற போதும் அடிப்படையில் 3.1) இலாப நட்டக் கூற்று 3.2) ஐந்தொகை 3.3) நிதியோட்டக் கூற்று என்பவற்றின் விபரமான பகுப்பாய்வினைக் கொண்டிருக்கும்.

3.1) இலாப நட்டக் கூற்றுப் பகுப்பாய்வு:

இலாப நட்டக் கூற்றுப் பகுப்பாய்வு செய்யப்படுகையில் அடிப்படையில் பின்வரும் நோக்கங்கள் கருத்தில் இடம் பெறும்

3.1) வரவுகளின் போக்குகளை (Trends in Income)

அடையாளம் காணல்

3.1) முழுலாபமீட்டலில் குறிப்பிடத்தக்கவேறு பாடான வரவு நிலை செலவு களின் மதிப்பீடு.

3.13) குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய காரணி களைத் தனிமைப்படுத்தல்.

இலாப நட்டக் கூற்று மீதான பரிசோதனை ஒரு சாதாரணமாகப் பின்வருவன வற்றைக் கொண்டிருக்கும்.

1, விற்பனையின் அளவு: உற்பத்திப் பொருட்கள் வாரியாக மற்றும் புவியான பகுதிகள் வாரியான விற்பனை விபரங்கள் மற்றும் மொத்த இலாப எல்லை (Margin) செலவு என்பவற்றின் வளர்ச்சி /வீழ்ச்சிப் போக்கினை அடையாளம் காணும் கூற்று.

2, வேறுபட்ட வகையான மேந்தலைச் செலவுகள் தொடர்பான விபரங் களும் அவற்றின் எதிர்கால Behavior இயல்பு நிலைகளும்.

3, ஆராய்ச்சி அபிவிருத்திக்கான செலவுகளும் அவற்றிலான உற்பத்தி வெளியீடு களும்.

4, மதிப்பிறவும், தேய்மானம் தொடர்பான இணைந்த கொள்கைகளும்.

5, மீள் நிகழ்வற்ற அல்லது வழமைக்குமாறான விடயங்கள்.

6, வெளி நாட்டு நடவடிக்கைகளின் பங்களிப்பும் அவற்றின் உள் நாட்டு உழைப்பிற்கு அப்பாலான வேறுபட்ட உயர் தரமும் .

கடந்த காலத் தரவுகளைப் பயன்படுத்தி எதிர் கால வருமானது மதிப்பீடு செய்யப்படுகையில் மேலும் சில விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென்பதை நினைவிற் கொள்ளல் அவசியமாகிறது.

1, குறிப்பிட்ட பொருளாதார அமைப்பும் எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிற்றுறையும் எதிர் நோக்கும் பொருளியல் நிலைப்பாடுகள்.

2, குறிப்பிட்ட தொழிற்றுறையின் தொழில்நுட்பம் மாற்றங்கள், மேலும் ஆராய்ச்சியின் பலாபலனும்.

3, நடை முறை மற்றும் வீரியப் போட்டா போட்டி.

4, இயந்திரம், பொறிகள் மீதான தற்போதைய [illegible] முதலீட்டுத் தேவைகளும்.

5, தற்போதைய மற்றும் எதிர்கால பணியாளர், தொழிலாளர் உறவுகள்

மேல் வருவனவற்றைக் கருத்தில் கொண்டு பகுப்பாய்வு செய்யப் படுகிற பொழுது திருப்தியான முடிவினை அடைவதற்குத் தரநோக்குடனேயே பகுப் பாய்வாளர் தரவுச் சேகரிப்பில் ஈடுபட வேண்டும்.

3.20, ஐந்தொகை

ஐந்தொகை மீதான பகுப்பாய்வில்பிரதானமாக செயற்படு மூலதனம் மற்றும் மூலதனக் கட்டமைப்பு மீது முக்கியகவனம் கொண்டதாக அமையும், இறுதி நிலையான சொத்துக்கள், அதன் மீதான மாற்றங்கள் பற்றிய மேலதிக ஆய் வும் மிகவும் பயனுள்ளதாகும்.
ஐந்தொகைப் பகுப்பாய்வில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கெடுக்கப்பட வேண்டும்.

3.21, செயற்படு மூலதனத்தின் அளவு :

காசு மீதிகள் போதுமானவையா?-(Accounts receivables In ventery) கணக்கில் பெறப்பட வேண்டிய மீதியும், சரக்கிருப்பும் உயர்வான நிலையில் தாழ்வான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றதா ? எனும் பரிசீலனை

3. , கடன்களின் அளவுகள்: இது கம்பனியின் இலாப மீட்டும் தன்மைக்கும் கடன்களின் மீதான வட்டிக்குமிடையேயான உறவினில் தங்கியுள்ளதுடன் நிதிநிலைப்பாடு ஸ்தாபனத்துக்கு அநுகூலமாகவோ அல்லது (பிரதிகூலமாகவோ) அமையலாம் எனும் பரிசீலனை

3.23, அண்மித்த காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய கடன்கள் ஏதும் உண்டா? எனும் பரிசீலனை

ஐந்தொகையானது நிரந்தர சொத்துக்கள் பற்றிய தகவலைத் தருவதுடன் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தின் மூலதன முதலீடு பற்றிய வழிகாட்டலுக்கும் மேலும் எதிர்கால மூலதன முதலீட்டுத் தேவை பற்றிய வழிகாட்டலுக்கும் கருவியாய் அமைகிறது.

3.3 நிதியோட்டக் கூற்று:-

நிதி சார் பகுப்பாய்வின் முக்கிய பாகமாக திரவத் தன்மை மீதான கூற்று அமைகிறது. இச் செயற்பாட்டில் வழமைக்கு மாறான விடயங்களும் போக்கும் தனிமைப்படுத்தப்படுதல் அவசியம். போக்குகள் (Trends) பொதுவாக நிரந்தரச் சொத்துப் பெற்றுக் கொள்ளப்படும் வழிவகைகள், செயற்படு மூலதனத்தின் அளவுகள், பங்கு இலாபக் கொடுப்பனவுகள் என்பனவற்றுடன் தொடர்புடையதாகும். நிதியோட்டக் கூற்றில் அனேகமாக, பாரிய முதலீடுகள் கொண்ட ஸ்தாபனங்களில் கடன் மீளளிப்பும் கடன் பெறுதலும் ஏரிதான

நிறுவாகவே அமையும், - மேலும் புதிய பங்குகள் வழங்கப்படுதலோ அல்லது விரைப் பத்திரிய பங்குகளின் புதுப்பித்தலோ வழமையாக இடம் பெறு இவ்வகையினவின் பகுப்பாய்வு எதிர்கால நோக்க வோட்டம் பற்றிய மிகச்சிறந்ததோர் மதிப்பீட்டினைத் தரக்கூடியதாக அமைய வேண்டும் எனெனில் வழமையான நிதி ஓட்டங்கள் இங்கே தெளிவாக அடையாளம் காணப்பட்டு விடுவதுடன் எதிர்கால மதிப்பீடும் உள்ளடக்கப்படக் கூடியதாக அமையும் அதேவேளை வழமைக்கு மாறான விடயங்கள் தெளிவாக அடையாளம் காணப்படுவதுடன் பொதுவாக மீள் நிகழ்வாதல் சரி யாமையால் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய தேவையுமற்றதாகிறது.

4.0 <u>நிதிசார் பகுப்பாய்வில் விகிதங்களின் பயன்பாடு</u> :

குறிப்பிடத்தக்க எண்ணற்ற கேள்விகளுக்கு ஒரு முழுமையான நிதிசார் பகுப்பாய்வு பதிலைத் தருமாதலின் இப்பகுப்பாய்வில் ஒரு முறைமையான அணுகுமுறை தேவையாகும். நடைமுறையில் ஒரு ஸ்தாபனத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பான இல்லது தேவைக் கேற்ப குறிப்பிட்ட பகுதிகள் தொடர்பான பல்வேறு நிதிசார் விகிதங்களைக் கொண்ட ஆய்வாக நிதிசார் பகுப்பாய்வு அமைகிறது நிதிசார் பகுப்பாய்வில் கணக்கீட்டு விகிதங்கள் [illegible]ப்படும் முக்கிய பகுதிகள் :

4.1, சொத்துக்களின் பயன்பாடும் லாப மீட்டும் தன்மையும்..
4.2, நீண்டகால முதலீட்டுக் கட்டமைப்பும் முதலீட்டின் உற்பத்தியும்.
4.3, தொழிற்படு மூலதனமும் திரவத் தன்மையும்.
4.4, பாதுகாப்பு
4.5, சாதாரண பங்குகள்

நடைமுறையில் பிரசுரிக்கப்பட்ட கணக்குகள் அநேகமான கேள்விகளுக்குப் பதிலளிக்க போதுமானதாக இருப்பதில்லை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கருத்தாகும், இந்த வகையில் ஒரு குறிப்பிட்ட வகையான ஸ்தாபனம் பற்றிப் பகுப்பாய்வில் ஈடுபடும் முதலீட்டுப் பகுப்பாய்வாளர் ஒருவர் அக் குறிப்பிட்ட நிறுவனம் தொடர்பாக ஒரு நிபுணத்துவ அறிவைக் கொண்டிருக்க முடியுமாதலின் பிரசுரக் கணக்குகளிலும் பார்க்க இவரால் பகுப்பாய்வு பல கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கூடிய உயர் சாத்தியம் உடையதாகும்.

4.1) சொத்துக்களின் பயன்பாடும் லாப மீட்டும் தன்மையும்

முதலீடு மீதான வருவாய் தொடர்பான விகிதங்கள்; இவை ப[illegible]

விதங்களில் கணிக்கப்பட்டு வேறுபட்ட வியாக்கியானங்களுக்கு உட்படுகின்றன. இங்கே இரண்டு முக்கிய வழமையான முறைகளைப் பார்ப்போம்.

4.11) மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம்.

இவ்விகிதம் நிறுவனத்தின் மொத்த சொத்தின் மீதான வருவாயை அளக்கப் பயன்படுகிறது.

"Ratio of Retern on Total Assets "

மொத்தச் சொத்தின் மீதான விகிதம்

$$= \frac{\text{வரிக்குப் பின் நிகர இலாபம்}}{\text{மொத்த சொத்துக்கள்}} \times 100\%$$

நிகர இலாபம் வரிக்குப்பின் நிகர இலாபமாகவே எடுக்கப்படுகிறது. மீள் நிகழ்விலா (Non recussing Income) வரவுகள் கணக்கீட்டில் விலக்கப்படுதற்குரியன. இவ்விகிதம் கம்பனிகளுக்கிடையான ஒப்பீட்டில் மிகப் பயனுள்ள தொன்றாகும்.

4.12) Ratio of Retern on equity

ஒப்புரவு மீதான வருவாய் விகிதம்:

உரிமையாளர்களின் முதலீடு மீதான இலாப வீதத்தினை அறியும் ஒரு அளவீடாக இது அமைகிறது மேலும் பங்காளர் தம் நிதி பயன்படுத்தப்படும் வேறுபட்ட

செயற்திட்டங்களை ஒப்பிடக் கூடிய அளவீடாகவும் அமைகின்றது. உதாரணம் :- கம்பனி முறிகள், கம்பனிப் பங்குகள், இதனுடைய முறையான பயன்பாடு எதிர்காலத்தில் நிதி திரட்டும் திறனையும் பிரதிபலிக்கக் காரணமாம். இதனைப் பின்வரும் சமன்பாடு எடுத்துக் காட்டும்.

ஒப்புரவு மீதான இலாப விகிதம் =

$$= \frac{\text{வரிக்கும் பங்குலாபத்திற்கும் பின்னான நிகர இலாபம்}}{\text{ஒரு பங்கின் சராசரிப் பெறுமதி}} \times 100$$

முதலீட்டின் மீதான வருவாய்

முதலீட்டின் மீதான வருவாய் ஒரு நிறுவனத்தின் முழு சாதனையை அளவிடும் கருவியாகும். இவ்வருவாய் வீதமானது இரண்டு காரணிகளில் தங்கியுள்ளது.

1, இறுதி நிலைத் தேறிய இலாபத்தின் அளவு

2, சொத்துப் பயன்பாட்டுத் திறம்.

இறுதி நிலைத் தேறிய இலாப வீதம் :

$$\frac{\text{வரிக்குப் பின்னான தேறிய லாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

இது ஒரு கொம்பனியின் விற்பனை மீதான லாப பெருக்கத்திறனைக் காட்டி நிற்கின்றது.

விற்பனையின் சொத்துப் பயன்பாட்டுத்திறம்: $\frac{\text{விற்பனை}}{\text{சராசரி மொத்த சொத்துக்கள்}}$

இது ஒரு கொம்பனியானது அதன் முழு சொத்துக்களிலிருந்தான விற்பனையீட்டுந் திறனை அளவிடும் கருவியாக அமைகின்றது.

4.2) நீண்ட கால மூலதன கட்டமைப்பும் மூலதன உற்பத்தித்திறனும்:

இந்த வகையிலடங்கும் விகிதாசாரங்களில் பிரதானமாகக் கணிக்கப்படும் விகிதம் கடன்களுக்கும் ஒப்புரவுக்குமான விகிதாசாரமே. இவ் விகிதமானது நீண்டகால வெளிவாரி, உள்வாரி, நிதியீட்டுக்களுக்கிடையிலான உறவினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மூலதனக்கட்டமைப்பில் நீண்ட பெரும் நீண்ட காலக் கடன்களின் பயன்பாடு அனுகூலங்களையுடைய அதேவேளை பிரதிகூலங்களையுமுடையது மேலும் நடைமுறையில் உண்மையான கடனின் அளவானது முதலீட்டு சமநிலைச் செயற்பாட்டின் விளைவேயாகும்.

* கடன்களிலுள்ள முக்கிய அனுகூலம் யாதெனில் பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர்களின் பாரிய முதலீடின்றிய அதிக வருமான மீட்டலுக்கான சந்தர்ப்பத்தை கடன்கள் அளிக்கின்றன.

மேலும் வரியியலில் கடன்கள் மீதான வட்டியானது வரிவிலக்குடை

யா என்பதுடன் மூலதன ஒப்புரவுப் பயன்பாட்டிலும் நடைமுறையில் உள்ள லாபகர மான திட்டமாகும். இக்கடன்களின் பிரயோசன மிக்க செயற்பாட்டுக்கு சொத் பனியானது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு கடன் பெறப்பட்டு வி யாபாரத்திலும் பெறப்படும் நிதியானது பாரிய வருமான மீட்டல் தரும் வகை யில் பயன்படுத்தப்படுதலும் கவனிக்கப்படின் மட்டுமே மேற்படி இம் மேலதிக லாபங்கள் சாதாரண பங்காளரைச் சென்றடைய முடியும். இதேபோல் கூடி இய வட்டியாலான நிரந்தரச் செலவு அதிகரிப்பு வருமானத்தின் மாறுபாட்டை யை அதிகரிப்பதால் சீரற்ற கையாள்கை ஸ்தாபனத்தின் வங்குரோத்து (Bank ruptcy) நிலைக்கு சந்தர்ப்பமளிக்குமபாயமுண்டு.

$$\text{Financial Leverage} = \frac{\text{நீண்ட காலக் கடன்கள் (நீ.கா.க.)}}{(\text{நீ. கா. க}) + (\text{ஒப்புரவு})}$$

$$\text{கடன் ஒப்புரவு விகிதம்} = \frac{\text{நீண்ட காலக் கடன்கள்}}{\text{மூலதன ஒப்புரவு}}$$

ஒப்பீட்டிற்கு உகந்த தரவுகளே கையாளப்பட வேண்டும் நிலைமையில் கடன் ஒப்புரவு விகிதம் பின்வருமாறும் கருதப்படுவது சரியானதே.

$$க.ஒ.வி = \frac{மொத்தப் பொறுப்புகள்}{ஒப்புரவு + மொத்தப்பொறுப்புக்கள்}$$

மேலும் இவ்விகிதங்கள் புத்தகப் பெறுமதியடிப்படையிலும் சந்தைப் (நடைமுறைப்) பெறுமதியிலும் கணிக்கப்படுவதுடன் வினைதிறன் மிக்க ஸ்தாபனங்கள் நடைமுறைப் பெறுமதியே உகந்ததாகவும் கருதுகின்றன.

4.22 , Capital Intensity மூலதன உற்பத்தித்திறன் பின்வரும் விகிதத்தால் அளவிடப்படுகின்றது. இதனைவிடவும் மேலும் சில அளவீடுகளும் உண்டு.

மூலதன உற்பத்தி விகிதமானது மொத்த சொத்துக்களில் நிரந்தரச் சொத்தானது எடுத்துக்கொள்ளும் பகுதியினைக் காட்டி நிற்கின்றது.
இந்த வகையில் உற்பத்தி ஸ்தாபனங்கள் வியாபார ஸ்தாபனங்களிலும் உயர் விகிதத்தையே கொண்டிருக்கும்.

நிதிசாரி ஆய்வு நோக்கில் ஐந்தொகையின் தரவுகள் அனைத்தும் மொத்த சொத்துக்களின் பெறுமான வீதங்களாக அறியப்படுகின்றன. இதே அடிப்படையில் ஒரே ஸ்தாபனத்தின் வெவ்வேறு கால நிலைப்பாடுகளையும் மட்டுமன்றி வெவ்வேறு ஸ்தாபனங்களின் நிதிசாரி நிலைப்

பாகங்களையும் ஒப்பிட்டு ஆய்ந்திட முடியும். இதேபோல் லாபநட்டங்கள் மற்றும் கிரயங்களும் கூட ஒப்பீடு செய்யப்படுகின்றன.

4.3) தொழிற்படு மூலதனமும் திரவத்தன்மையும் :-

திரவத் தன்மையும் தொழிற்படு மூலதனமும் தொடர்பான விகிதங்கள் நிதி நிலைவளங்களைப் பற்றிய மதிப்பீட்டிற்கு உதவுகின்றன. கடன் கொடுநர்களும் கடன் வழங்கும் நிறுவனங்களும் ஒரு ஸ்தாபனத்தின் கடன் மீள் அளிப்புத் திறனில் அக்கறையுடையன. அந்தவகையில் திரவத்தன்மை சார் விகிதங்கள் பாதுகாப்பு உறுதியைக் காட்டி நிற்கின்றன.

பின்வரும் பகுதியில் சாதாரணமாக பயன்பாட்டிலுள்ள விகிதங்களை அறிவோம்.

4.31 , நடை முறைவிகிதம் Current Ratio :

$$1, \quad \frac{\text{நடை முறை சொத்துக்கள்}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$$

இது ஒரு ஸ்தாபனத்தின் குறுங்காலப் பொறுப்புக்களைத் தீர்க்கும் திறனை வெளிப்படுத்துகின்றது. இவ்விகிதம் உயர்வாகக் காணப்படுதலே பொறுப்புக்களுக்கு போதுமான பாதுகாப்பாகும். ஆனால் சாதாரணமாக உயர்

நடைமுறைச் சொத்துக்கள் ஒருபோதும் உயர் லாபத்தினையிட்ட இட்டுச் செல்வதில்லை. கணக்கில் பெறப்பட வேண்டிய தொகை உயர்வாயிருப்பின் நடை முறைச் சொத்துக்களை உயர்த்திய காட்டும் [illegible] நடை முறைச் சொத்துடைய ஸ்தாபனம் ஒரு சிறு வரிக்கொடுப்பனவை கூட [illegible] வழங்க இயலாத நிலைப்பாட்டிலிருக்கலாம். மேலும் நடைமுறை விகிதம் 2:1 ஆக அமையின் நன்றே எனினும் 1:1 கூட சமாளிக்கக்கூடிய நிலைமையே, 1:2 எனும் விகிதம் ஸ்தாபனம் நடை முறைக் கொடுப்பனவுகளைச் செய்ய இயலாத நிலைமையே காட்டி நிற்கும்.

நடை முறையிலுள்ள ஸ்தாபனமொன்றின் நிதிசார் போக்குகள் [illegible] ஸ்திரமற்ற நிலையினைக் காட்டி நிற்கும், முக்கிய சில போக்குகள் (Trends)

அ) தேறிய /மொத்த லாபக் குறைவு/ நட்டம்

ஆ) நடைமுறைச் சொத்துக்களில் திரவக் காசு குறைவாகவும் [illegible] கூடுதலாகவும் காணப்படுதல்.

இ) பணத்தின் நிரந்தரச் சொத்து மீதான பாரிய முதலீட்டினால் நிரந்தரச் சொத்து மீதான உயர் பராமரிப்புச் செலவும்.

ஈ) உயர் கடன் கொடுநர்.

679

4.32, திரவநிலை அல்லது அமிலப் பரிசோதனை விகிதம்
Liquid or Acid test Ratio

$$\frac{\text{நடைமுறைச் சொத்துக்கள் - இருப்பு}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$$

இவ்விகிதமும் குறுகிய காலத்திரவநிலையுடன் தொடர்புடையது. இப் பரிசோதனை அல்லது திரவநிலை விகிதமானது நடைமுறை விகிதத்தின் விரிசெவ்வையானதொரு அளவீடாகும் ஏனெனில் நடைமுறைப் பொறுப்புக்களைச் சமாளிக்கும் நிதி மூலவளங்களை திரவநிலைச் சொத்துக்களே பிரயோகம் செய்ய முடியும். ஒரு பாதுகாப்பான திரவநிலை நடைமுறைப் பொறுப்புக்களிலும் பார்க்க உயர்வான திரவநிலைச் சொத்துக்களைக் காட்டுகிறது, இந்தவகையில் 1:1 என்பது Theoretical minimum - குறைந்த விகிதமாகும்.

4.33 , Receivables Turnover -
பெறப்படக்கூடிய மீதிகள் புரள்வு =

$$= \frac{\text{விற்பனை}}{\text{சராசரி கணக்கில் பெறப்படக் கூடியவை}}$$

இவ் விகிதம் ஒருவருடத்தில் பெறப்படு கணக்கு விற்பனைத் தொகையை மாறு சராசரி அளவைக் காட்டி நிற்கும். நடைமுறையில் சேகரிப்புக் காலம் ஒரு ஸ்தாபனத்தின் வாடிக்கையாளர் நம்மதிப்பைக் கருத்திற்கொண்டு ஏடு தனாகவே பேணப்படும் எனவே சராசரி கடன் சேகரிப்பு காலமானது குறையுமளவு பெறப்பட வேண்டிய கணக்குப் புரள்வு உயர்வையே காட்டும்

$$\frac{\text{சராசரி கணக்கில் பெறப்படுதொகை}}{\text{விற்பனை}} \times 365$$

4.34, சரக்கிருப்புப் புரள்வு =
Inventory tarnovers

$$= \frac{\text{விற்றசரக்கின்கிரயம்}}{\text{சராசரி சரக்கிருப்பு}}$$

இது எத்தனை தடவை குறிப்பிட்ட காலத்தில் சராசரி சரக்கிருப்பு புரள்வதைக் காட்டுகின்றது.

மேலும் $\frac{\text{சராசரி சரக்கிருப்பு}}{\text{விற்ற சரக்கின் கிரயம்}} \times 365$ எனும் அளவீடு இருப்புச் சரக்கு சராசரி எத்தனை நாட்களுக்கு போதுமானவை பேணப் படுகின்றது என்பதைக் காட்டும்.

கூடுதலான புரள்வு ஸ்தாபனத்தின் விற்பனைத் திறனையே காட்டும்.

4.35) கடனிகள் புரள்வு

Creditors turnover

$$= \frac{\text{கடன் கொள்வனவு}}{\text{சராசரி கடன் கொடுநர்}}$$

மாற்றாக கடன் கால குத்திரத்தைப் பயன்படுத்தலாம்.

$$\frac{\text{சராசரி கடன் கொடுநர்}}{\text{கடன் கொள்வனவு}} \times 365$$

இதன் விளைவு கடன் தரும்காலத்தைக் குறிக்கும்.

5.0) பாதுகாப்பு Security

இதற்கான விகிதமானது கடன் கொடுநருக்கும் கடன் வழங்கு ஸ்தாபனங்களுக்கும் முன்னுரிமைப் பங்குதாரருக்குமான கிடைக்கக்கூடிய பாதுகாப்பினை வெளிப்படுத்தும்

5.1) Security of current liabilities

நடைமுறைப் பொறுப்புக்களின் பாதுகாப்பு =

$$= \frac{\text{தேறிய பெறுமதி}}{\text{நடை முறைப் பொறுப்புக்கள்}}$$

இதன் உயர் விகிதம் நடைமுறைப் பொறுப்புக்களின் உயர் பாதுகாப்பாகும்.

5.2, வட்டியின் உழைப்பு விகிதம் Times Interest earned

$$= \frac{\text{வரிக்கும் வட்டிக்கும் முன்னுள்ள உழைப்பு}}{\text{கொடுகடன் வட்டி}}$$

இது எத்தனை தடவைகள் உழைப்பானது கொடுகடன் வட்டியை ஈட்டக்கூடும் என்ற உறுதியை அளிக்கவல்லது

5.3 Preferred dividend coverage

முன்னுரிமைப்பங்கு லாப மீட்சி =

$$= \frac{\text{வரிக்குப் பின்னுள்ள உழைப்பு}}{\text{தேவையான முன்னுரிமைப் பங்குலாபம்}}$$

இது முன்னுரிமைப் பங்கு லாபம் கொடுப்பனவுக்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டினை வழங்குகின்றது.

6) <u>சாதாரண பங்குகள்</u> :

பங்குகள் தொடர்பான வேறுபட்ட விகிதங்களில் பொதுவான விகிதங்கள் சில:

6.1 ஒரு பங்குக்கான உழைப்பு (வருவாய்) விகிதம் Earnings per share Ratio

EPS = தேறிய இலாபம் (வரிக்கும் முன்னுரிமைப் பங்கு லா பங்கிற்கும் பின்)
சாதாரண பங்குகளின் தொகை

6.2 விலை உழைப்பு / விளைவு விகிதம் Price -Earnings Ratio

ஒரு சாதாரண பங்கின் சந்தை விலையை அதன் வருவாயுடன் ஒப்பிடுவதாகும்.

PER = ஒரு சாதா. பங்கின் சந்தைவிலை
ஒரு சாதா. பங்கின் வருவாய்.

6.3 ஒரு பங்குக்கான பங்கிலாபம் Dividends per share ratio

DPS = சாதாரண பங்குதாரருக்கான பங்கிலாபம்
வழங்கிய பங்குகளின் தொகை

பங்குலாப கொடுப்பனவு விகிதம் Dividend pay out Ratio

$$DP.OR = \frac{\text{பங்கு லாபம்}}{\text{மொத்த உழைப்பு (விளைவு)}}$$

6.5 பங்கு இலாப உழைப்பு விகிதம் Dividend yield Ratio

$$DYR = \frac{\text{ஒரு பங்கின் பங்கு இலாபம்}}{\text{ஒரு பங்கின் சந்தை விலை}} \times 100$$

6.6 ஒரு பங்கின் புத்தகப் பெறுமதி Book value Per share

$$BVPR = \frac{\text{சாதாரண பங்குதாரர் ஒப்புரவு (equity)}}{\text{வழங்கப்பட்ட பங்குகளின் தொகை}}$$

6.7 மூலதன இயக்க விகிதம் Capital Gearing Ratio

$$CGR = \frac{\text{ஒப்புரவு மூலதனம் + ஒதுக்கமும் மேல் மிகுதி}}{\text{முன்னுரிமை மூலதனம் + நிலையான வட்டியுடை நீண்டகாலக்கடன்}}$$

நிலையான லாப ஈவைப் பெறக்கூடிய வகையிலே மூலதன இயக்க விகிதம் பேணப்பட வேண்டும்.

* கணக்கியல் விகிதப் பகுப்பாய்வின் வரையறைகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

1, விகிதங்கள் எப்பொழுதும் நிதிசார் கணக்குகளிலேயே தங்கியிருக்கின்றன எனவே இக்கணக்குகளில் ஏற்படக்கூடிய அனைத்துக் குறைபாடுகளின் தாக்கத்தையும் கொண்டிருக்கும்.

2, ஒரு சில விகிதங்கள் தேவையான கையாளல்களுக்கு (Manipulation) உட்படக்கூடுமாதலின் உண்மை நிலை மறைத்துக் காட்டப்படலாம் இதுவே Window dressing எனவும் Cosmetic Accounting எனவும் வழங்கப்படும்.

3, உ+ம் சரக்கிருப்பு நிலை தாபனங்களுக்கிடையான ஒப்பீடானது செய்யப்பட்ட தாபனங்கள் நடைமுறைப்படுத்தும் கணக்கீட்டு கொள்கைகளின் வேறுபாட்டினால் தொடர்பற்ற விளைவுத்தரவுகளைக் கொண்டிருக்கும் நிலையை எதிர்நோக்கும்.

4, பாரம்பரிய நிதிக் கூற்றுக்கள் நிதிசார் தன்மையற்ற தரவுகளை வெளிப்படுத்தக்கூடியவாறு அமைவதில்லை எனவே சில மீள் ஒழுங்காக்கத்தின் சில வகையான நிதியோட்டக் கூற்றுக்கள் வேண்டி நிற்கின்றன.

உ+ம் சில செலவுகள் (கிரயம்) நிலையான செலவு மாறும்

செலவு குறைமாறும் செலவு என மீள் ஒதுக்கம் செய்யப்பட வேண்டும்.

5) ஒரு தனி விகிதத்தின் பயன்பாடு எந்த ஒரு அர்த்தமுள்ள முடிவையும் தர முடியாத பலவிதமான விகிதங்களும் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும்.
   - Lack of us e off a single Ratio.

6) கணக்கீட்டிலுள்ள குறைபாடுகளின் தாக்கம் விகித பகுப்பாய்வில் தாக்கப் பாதிப்படைய வையே
   - Limitations of accounting.

7) நியம அடிப்படை இல்லாமை. விகித உய்வின் அளவீட்டு நியமம் எனும் வரையறுக்கப்படாத தனிநபர் அல்லது நிறுவனங்களின் விருப்புக்கேற்பப்படுகின்றன - Lack of definite standards

8) பிரச்சினைகள் தர/ அளவு எனும் இருபக்கமுடையது. எனினும் விகிதங்கள், பெரும்பாலும் அளவு வேறுபாட்டினையே கொண்டிருக்கின்றமையால் தரம்/ பண அடிப்படையிலான அளவுகளைக் கருத்திலெடுக்க முடியுமே பிரச்சனையின் தரத்தினைப் பற்றி அறிய முடிவதில்லை.
   - Lack of Qualitative measurement.

9) விலைமாற்றங்களும் பெறுமதி மாறுதல்களும்.
ஒப்பீட்டில் கணக்கில் கெடுக்கக் கொள்ளப்படுவதில்லை. (No allowance for change in Price level is considered in analysis)

[illegible]

10) பொருள் விளக்க வேறுபாடும் தவறான வியாக்கியானங்களும்: நிதியியற் சொற்றொடர்களின் விளக்கங்கள் தவறான செய்முறையில் உபயோகிக்கப்படலாம் மேலும் செய்முறைப் பயன்பாட்டில் வேறுபடலாம்.

மேற் கூறிய குறைபாடுகள் விகித ஆய்வினைப் பாதிக்கும். சாத்திய முறைகளிலும் முகாமைப் பணிகள் சிறப்புற அமைய விகித ஆய்வு பயன்படுகின்றது என்பதில் ஐயமில்லை.

கணக்கீட்டு விகிதங்கள் :

ஒரு நிறுவனத்தின் நிதிநிலைமையையும் திறனையும் மதிப்பிடத் தேவைப்படும் ஓர் அளவுகோல் கணக்கீட்டு விகிதங்களாகும். விகிதங்களின் மூலம் பகுப்பாராய்தல் ஒரு சிறப்பான கருவியாக உள்ளது.

விகித ஆய்வு : நிதியியல் கூற்றிலிருந்து எடுக்க கூடிய தரவுகட்கிடையேயான தொடர்பைக் கணக்கியல் ரீதியாகப் பிரதிபலிப்பது விகிதமாகும்.

றொபேட் அன்தொனி அவர்கள் விகிதமென்பது ஓர் எண்ணுக்கும் மற்றைய எண்ணுக்குமிடையேயான தொடர்பினை விளக்குதல் என்றுரைத்தார்.

பழமையடிப்படையில் விகிதங்களை பின்வருமாறு பிரிக்கலாம்

1, ஐந்தொகை நிலைக்குறிப்பு விகிதங்கள்

2, இலாப நட்டக் கணக்கு நிலை விகிதங்கள்

3, கலப்பு விகிதங்கள்

ரொபேட் அன்தொனி எனும் அறிஞர் நிதியியல் விகிதங்களை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

1, திரவக (நீர்மை) விகிதம் (Liquidity Ratio)

2, இலாபத்தன்மை விகிதம் (Prafitability Ratio

3, சரக்கோட்ட விகிதம் (Turnover Ratio)

4, கடன் தீர்வு திறன் விகிதம் (Solvency Ratio)

முதன் முதலில் விகிதங்கள் மூலம் பகுத்தாய்தல் பற்றிய ஓர் அறிக்கையினை 1919 ஆண்டில் அலெக்ஸாண்டர் வால் அவர்கள் வெளியிட்டார்.

<u>பயிற்சி 01</u>

பின்வரும் தகவல்களிலிருந்து மூலதன மற்றும் உரிமையாளர் நிதிக்கூற்றைத் தயார் செய்க:

அ) நடைமுறை விகிதம் - 2.5

ஆ) திரவக விகிதம் - 1.5

இ) செயற்படு மூலதனம் ரூபா 60,000/-

ஈ) உரிமை விகிதம் : நிர.சொத்துக்கள் / உரிமையாளர் நிதி 0.75

உ) ஒதுக்கமும் மேலதிகமும் - ரூபா 40.000/-

ஊ) நீண்ட காலக்கடன்களோ ஏனைய நடைமுறைச் சொத்துக்களோ இல்லையெனக் கொள்க.

பின்வரும் விகிதங்களின் பயன்பாட்டினை விளக்குக

அ) 1, திரவ /நீர்மை விகிதம் 2) ROI 3) கடன் ஒப்புரவு விகிதம்

ஆ) பின்வரும் தகவல்களின் அடிப்படையில் ஸ்தாபனத்தின் ஐந்தொகையை வரைக:

நடைமுறை விகிதம் - 1.75 திரவ விகிதம் - 1.25

சரக்கு புரள்வு (விற்பனைக்கிரயம்/சரக்கிருப்பு) -9

மொத்த லாப விகிதம் 25%

கடன் மீட்சிக்காலம் - 1½ மாதம்

ஒதுக்க விகிதம்-முதலுக்கு - 2

விற்பனை புரள்வு / நிரந்தர சொத்து விகிதம் - 1.2

மூலதன இயக்க விகிதம் 0.6

நிர.சொத்து / தேறிய பெறுமதி - 1.25

வருடத்துக்கான விற்பனை ரூபா 1200,000/-

முக்கிய விகிதங்களின் ஒரு முகப் பார்வை

விகிதம்	சமன்பாடு	பயன்பாடு
லாபத்தின் விகிதங்கள்		
1, பொதுவான லாபத் தன்மை விகிதம்	லாபம் / ஈடுபடுத்திய மூலதனம் x 100	ஈடுபடுத்திய மூலதனத்திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் காட்டி உதவுகின்றன.
2, மொத்த லாப விகிதம்	மொத்த லாபம் / நிகர விற்பனை x 100	வியாபார நடவடிக்கையின் திறமையைக் காட்டுகின்றன.
3, நிகரலாப விகிதம்	நிகரலாபம் / நிகர விற்பனை x 100	விற்பனையின் மேலாண்மையின் திறமையைச் சுட்டிக் காட்டுகின்றன.

4, நடைமுறைச் செலவு விகிதம்	விற்ற பொருளின் அடக்க விலை + நடைமுறைச் செலவு / நிகர விற்பனை x 100	நிர்வாகத் [illegible]
5, சொத்துக்கள் மீதான லாப விகிதம்	நிகர லாபம் / மொத்தச் சொத்துக்கள் x 100	லாபத்தில் சொத்துக்களின் பங்கினைக் [illegible]கின்றது.
6, பங்குதாரர் நிதியின் வருவாய் விகிதம்	பங்குதாரர்களுக்கான லாபம் / பங்குதாரர் நிதி x 100	பங்கு மூலதனத்தின் வருவாய் திறனை அளவிடுகின்றது.
7, ஒரு பங்கின் வருமான விகிதம்	சமபங்கு தாரர்களுக்குக் கிடைக்கும் லாபம் / சமபங்குகளின் எண்ணிக்கை x 100	ஒரு பங்கு ஈட்டும் வருவாயைக் காட்டுகின்றது.

[illegible]

8, பங்காதாய விளவு விகிதம்.	ஒரு பங்கின் பங்காதாயம் / ஒரு பங்கின் சந்தை விலை × 100	பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் காட்டுகிறது.
9, விலை ஈட்டும் விகிதம்.	ஒரு பங்கின் சந்தை விலை / ஒரு பங்கின் ஈட்டுந் திறன் × 100	ஒரு பங்கின் மதிப்பைத் தீர்மானிக்க உதவுகிறது.

நீர்மைத் தன்மை விகிதம்

1, நடப்பு விகிதம்	நடப்புச் சொத்துகள் / நடப்பு பொறுப்புகள்	குறுகிய கால கடனைத் திரும்பத் தரும் திறனை அளவிடுகிறது.
2, அமில சோதனை	ரொக்க நிலை சொத்துகள் / ரொக்க நிலை பொறுப்புகள்	குறுகிய காலத்தில் கடன்களைச் செலுத்தும் திறனை அளவிடுகிறது.
3, கடன் ஒப்புரவு விகிதம்	புற ஒப்புரவுகள் / அக ஒப்புரவுகள்	பங்கு முதல் மீதான பணியின் எல்லையை அளவிடுகிறது.
4, உரிமையாளர்	பங்குதாரர் நிதி / மொத்த நிலையான சொத்துக்கள்	மொத்தச் சொத்தில் பங்குதாரர் நிதி எவ்வளவு என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

சரக்கு ஓட்ட விகிதம்	விற்ற பொருட்களின் அடக்க விலை / சராசரி சரக்கிருப்பு	சரக்கிருப்பின் நிலையை மதிப்பிடுகின்றது.
1, நிலையான சொத்து சரக்கு ஓட்டவிகிதம்	விற்ற பொருளின் அடக்க விலை / நிலையான சொத்துக்கள்	விற்பனையில் நிலையான சொத்துக்களின் பங்கைக் காட்டுகின்றது.
2, நடைமுறை மூலதன சரக்கு ஓட்ட விகிதம்	நிகர விற்பனை / நடைமுறை மூலதனம்	விற்பனையில் நடைமுறை மூலதனம் சிறந்த முறையில் பயன் படுத்தப்படுகின்றதா என்பதைக் காட்டுகின்றது.
3, கடனாளிகள் சரக்கு ஓட்டவிகிதம்	கடன் விற்பனை / சராசரிக் கணக்கில் பெற வேண்டியவை	எட்டுக்கடனை வசூலிப்பதில் பணியாளரின் திறமையைக் காட்டுகின்றது.
4. கடன் வசூல் கால விகிதம்	கணக்கில் பெற வேண்டியவை / சராசரி மாத அல்லது தின சரி கடன் விற்பனை	கடனாளியின் தரத்தைக் காட்டுகின்றது.
5, கடனளித்தோர் சரக்கு ஓட்ட விகிதம்	கடன் கொள்முதல் / சராசரி கணக்கில் தர வேண்டியவை	கடன் அளித்தவருக்கு பணம் திரும்பத் தருவதில் வேகத்தைக் காட்டுகின்றது.

629

I. M. S. வெளியீடு 02/250

நிதிநிலைப் பகுப்பாய்வும்

இணைந்த

கணக்கீட்டு விகிதங்களும்

FINANCIAL ANALYSIS

And Related

ACCOUNTING RATIOS

ஆக்கியோன்:

நல்லையா - குமரகுருபரன்

FIMS (England) ICIA (Charter - Canada) Dip Accy

வெளியீடு: மேலாண்மைக் கல்வி நிறுவனம்

Institute of Management Studies

650
குமர